ஞாலகுருவின் படைப்புக்கள்

# இ.ம.இ., இ.மு.க. கொள்கை விளக்கம்.



நமது தாயகத்தில்
தனிமனித வாழ்வும், குடும்ப
வாழ்வும் முழுக்க முழுக்க
இந்துவேத வழியிலும்,
இந்துமத வழியிலும்
மட்டுமே நிகழ்ந்தேறி
அருளாளர்களும்,
அருட் குடும்பங்களும்
ஊர் தோறும் விரல்விட்டு
எண்ணிடக் கூடிய அளவு
தோன்றும்படிச் செய்ய
வேண்டும்.

அண்டபேரண்ட ஆதிசத்திகள்
சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரார்.

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 பங்குனி மாதம்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**<u>பங்குனி மாத வெளியீடு.</u>**

**<u>தலைப்பு:</u> இ.ம.இ., இ.மு.க. கொள்கை விளக்கம்.**

# <u>உள்ளுறை</u>

1. **“இ.ம.இ., இ.மு.க. கொள்கை விளக்க அஞ்சல் கட்டுரை”** - தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் கூற குருதேவர் எழுதுவித்த கட்டுரை வடிவ அஞ்சல்.
2. **“அருளாளர்களும் அருட்குடும்பங்களும் ஊர்தோறும் தோன்ற வேண்டும்”** - இந்து மறுமலர்ச்சி இயக்கம், இந்து முன்னேற்றக் கழகம், சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம், அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் ஆகியன செயல்படுத்துவது பற்றி குருதேவர் எழுதிய அஞ்சல்.
3. **“இந்துக் கோயில்கள் இங்கே! இந்து வேதம் எங்கே?”** - *மாசி மகமும் இந்து வேதமும்* என்ற தலைப்பில் குருதேவர் வழங்கிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி.
4. **“இந்து முன்னேற்றக் கழக அறிவிக்கை எண்: 8889”** - பொதுமக்களிடையே செயல்படும் போது பயன்படுத்த வேண்டிய அறிவிக்கைப் பலகைக்கான வாசகங்கள்.

# இ.ம.இ., இ.மு.க. கொள்கை விளக்க அஞ்சல் கட்டுரை

*[குருமகாசன்னிதானம் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் சொல்ல எழுதியது.*

*17-3-1992 செவ்வாய்க்கிழமை மாலை 5:45க்கு எழுதத் துவங்கி இரவு 12.05க்கு நிறைவுற்றது. (இடையில் 10:10 to 11:30 உணவு இடைவேளை.) ஆக, தொடர்ந்து 5 மணி நேரம் எழுதப்பட்டு முடிவு செய்யப்பட்ட கட்டுரை இது.]*

பொன்னேரி,
17-3-1992.

பெறுநர்:-

திரு அழ. வெங்கடாசலம்,
7/165, E. B. காலனி,
காந்திகிராமம் வடக்கு,
பசுபதி பாளையம், கரூர் - 639004.

பேரன்பிற்கும், பேரார்வத்திற்கும் உரிய தமிழின மொழி நாட்டுப் பற்றுமிகு, தன்மானப் போக்குமிகு சித்த மருத்துவர் உயர்திரு அழ. வெங்கடாசலம் அவர்களுக்கு;

1. பதினெண்சித்தர் மடாதிபதி, குவலய குருபீடம், இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருதேவர் அவர்கள்; தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்திலிருந்து

திரும்பிய பிறகு, அவ்வப்போது கூறிய செய்திகள் திருமடத்து அலுவலகத்திலிருந்து தொகுத்து வழங்கப்படுகிறது.

2. வீரமிகு இளைஞரே! துடிதுடிப்பும், துள்ளல்மிகு இந்துமதப் பற்றும், கூர்மைமிகு இன உணர்வும், வளமிகு மொழி உணர்வும், திட்டவட்டமான அரசியல் ஈடுபாடும் பின்னிப் பிணைந்த வாழ்வுடையீர் தாங்கள். எனவேதான், தங்களை வைத்து மிகப் பெரியபெரிய செயலாக்கங்களைச் செய்ய வேண்டுமென்று திருவுளம் கொண்டுள்ளார் நமது குருதேவர். இதனைப் புரிந்து செயல்படுக.

3. தாங்கள் தாராசுரத்திற்கு குருதேவரின் வருகைக்கு 24 மணி நேரத்திற்கு முன்பே வந்து செயல்பட்டது குறித்து குருதேவர் மிகவும் பாராட்டினார், பாராட்டுகிறார்.

4. தாங்கள் தாராசுரத்தில் குருதேவரிடம் கரூர் வருவதற்கு நாள் கேட்டுப் பேரார்வத்துடன் செயல்பட்டமையை விதந்து வியந்து பாராட்டுகிறார் குருதேவர். **தமிழினத்தில் இலைமறை காயாக** ஆங்காங்கே தங்களைப் போன்ற உணர்ச்சித் துடிப்பு மிக்க வீர இளைஞர்கள் **இருப்பதை நம்பித்தான், உணர்ந்துதான், கருதிப் பார்த்துத்தான்** குருதேவர் பட்டப்பகலிலும், நட்ட நடுநிசியிலும், கொட்டும் மழையிலும், பனியிலும் கூட்டங்கள் போட்டு அருளுரையும், அறிவுரையும் வழங்கி வருகிறார், வழங்கி வருகிறார், வழங்கி வருகிறார்.

5. ஆனால், அத்தி பூத்தது போல் குருதேவரை நோக்கி வருகின்ற வீர இளைஞர்களில் **எப்போதாவது, எங்காவது, எதிர்பாராத வண்ணம் ஓரிரு வீர இளைஞர்கள்தான் தொடர்ந்து குருதேவருடன் தொடர்பு வைத்துக் கொள்கிறார்கள்**.

**குறிப்பு**:- அதாவது இந்த நாட்டு இளைஞர்களைப் பொறுத்தவரை குருதேவருக்கு மிகுந்த ஏமாற்றம்தான். அதாவது, இந்த நாட்டு இளைஞர்களில் ஏறத்தாழ எல்லோருக்குமே மணிக்கணக்கிலும்,

நாட்கணக்கிலும் கிரிக்கெட், ஆக்கி, ... முதலிய விளையாட்டுக்களைப் பற்றியும், விளையாட்டு வீரர்களைப் பற்றியும் பேசுவதிலோ அல்லது திரைப்படங்களைப் பற்றியும், திரைப்பட நடிகர்களைப் பற்றியும் பேசுவதிலோ அல்லது இன்றைய நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படாத கருத்துக்களைத் தருகின்ற எழுத்தாளர்களையும், இலக்கியங்களையும் பற்றிப் பேசுவதிலோ அல்லது கண்மூடித்தனமாக தங்களுக்குப் பிடித்தமான அரசியல் தலைவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதிலோதான் ஈடுபாடு மிகுதியாக இருக்கிறது. இப்படிப்பட்ட இளைஞர் சமுதாயத்தை எப்படிக் கட்டுக்கோப்பான சிந்தனைகளையும், செயல்களையும் உடைய மதவழி இயக்கத்திற்கும், கழகத்திற்கும் பயன்படுத்திக் கொள்வது என்ற வினாநிலையில்தான் இருக்கிறார் குருதேவர்.

6. தாங்கள் குருதேவரைக் கண்டவுடனேயே குருதேவரைக் கரூருக்கு வர வேண்டுமென்று அழைத்தீர்கள். ஆனால், குருதேவர், தங்களுடைய இளமையையும், துடிதுடிப்பையும் கண்டு ஐயமுற்றார். ஏனென்றால், குருதேவர் கோடை இடிகளோடு கூடிய கோடைக்காலத்துப் பெருமழை போல் ஆற்றிய சொற்பொழிவின் பயனாகத் தோன்றிய நிலையற்ற ஒருநாள் வாழ்க்கையை உடைய காளான் போன்றதாகவே தங்கள் ஆர்வம் இருக்குமோ என்று ஐயுற்றார். எனவேதான், உடனடியாகத் தங்கள் ஊருக்கு வரக்கூடிய தேதியை அறிவிக்கவில்லை.

**குறிப்பு**:- குருதேவர் ஐயப்பட்டது சரியென்பது போல் குருதேவர் ஊர் திரும்பி 8 நாட்களுக்கு மேலாகியும், தாங்கள் குருதேவரோடு எந்தவிதமான அஞ்சல் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. மெய்யாகவே, தங்களுக்கு குருதேவரைக் **கரூருக்கு வரவழைப்பதில்** அளப்பரிய அக்கறையும், ஆர்வமும் இருந்திருந்தால் உடனேயே நேரில் புறப்பட்டு குருதேவரைக் காண வந்திருப்பீர்கள்; அல்லது தொலைபேசி மூலம் பல தொடர்புகளை உண்டாக்கி இருப்பீர்கள்;

அல்லது தொடர்ந்து அஞ்சல்கள் எழுதியிருப்பீர்கள். இதுபற்றிய விளக்கம் தேவை.

7. தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்டுவிட்ட வீழ்ச்சி நிலைகளையும், தாழ்ச்சி நிலைகளையும் முறையாக எண்ணிப் பார்த்தால் இவற்றிற்கு அன்னியர்களின் சூழ்ச்சிகள் மட்டும் காரணமில்லை என்பது புரியும். தமிழர்களின் மத உணர்வு வலுவிழந்ததால், வளமிழந்ததால், வாழ்விழந்ததால்; தமிழர்கள் தனிமனிதப் பகைகளாலும், வெறுப்பு மறுப்பு எதிர்ப்புகளாலும், காரண காரியமற்ற பழம்பெரும் வெறிநிறை பழியுணர்ச்சிகளாலும் ஒருவரையொருவர் குறைகூறிக் குற்றம் சாட்டி, முட்டி மோதிக் கொண்டு பிரிந்து சிதைந்து கிடக்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக அரசியல் அமைப்புக்களின் பெயர்களாலும், சமுதாய அமைப்புக்களின் பெயர்களாலும், சாதிமதங்களின் பெயர்களாலும், தனிப்பட்ட வட்டாரங்களின் பெயர்களாலும், கலைத்துறையினர்களின் பெயர்களாலும் எண்ணற்ற சிறியசிறிய கூட்டங்களாகவும், குழுக்களாகவும் பிரிந்து பிரிந்து கிடக்கின்ற தமிழர்கள்; தங்கள் தங்களுடைய அமைப்புக்களை வளர்க்க வேண்டும் என்பதற்காக மற்ற அமைப்புக்களை சிதைத்து, அழித்து, எரித்துச் சாம்பலாக்கித் தங்கள் அமைப்புக்களின் வளர்ச்சிக்காக உரமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற வெறி நிறைந்த போக்கில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன எல்லா அமைப்புக்களும்.

8. அதாவது இன்றைய தமிழகத்தில் எந்தவொரு தனிமனிதனோ அல்லது எந்தவொரு தனிப்பட்ட அமைப்போ தமிழர்களாக உள்ள மற்ற மக்களையும், தமிழர்களுடைய நிறுவனங்களாக இருக்கின்ற மற்ற அமைப்புக்களையும் ஒன்றுகூட்டித் தமிழ்மொழியின் பெயராலோ; தமிழினத்தின் பெயராலோ; தமிழ்நாட்டின் பெயராலோ ஒற்றுமைப்படுத்தி, ஒருமைப்படுத்தித் தலைமை தாங்கி வழி நடத்தத் தயாராகவில்லை, தயாராகவில்லை, தயாராகவில்லை, தயாராகவேயில்லை. ஆனால்,

பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான தனிமனிதர்களும், நிறுவன அமைப்புக்களும் தங்களைத் தமிழகம், தலைவராக ஏற்றுச் செயல்பட வேண்டும் என்ற அற்பக் கற்பனுவாதப் பேராசையில்தான் வாழுகிருர்கள், வாழுகிருர்கள், வாழுகிருர்கள். இதுதான் இன்றைய தமிழகத்தின் மெய்யான நிலை.

9. இவற்றையெல்லாம் எண்ணித்தான், நமது குருதேவர் கால் நூற்ருண்டுக் காலத்திற்கு மேலாக பட்டிதொட்டிகளிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும் உள்ள இளைஞர்களை அவரவர்கள் செயல்படுகின்ற வாய்க்கால், வயல், வரப்புவெளிகளிலும், ஏரிக்கரைகளிலும், ஆற்றங்-கரைகளிலும், தொழிற்சாலைகளிலும், அங்காடிகளிலும், பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் தேடித் தேடிச் சென்று கண்டு இரவுபகல் என்று பாராது மணிக்கணக்கிலும், நாள்கணக்கிலும் கருத்து விளக்கங்கள் கொடுத்து அறிவுப் பணிகளை அவரவர் தரத்திற்கும், திரத்திற்கும், திறத்திற்கும் ஏற்ப நிகழ்த்திஞர். அவர் சிங்கக் குரலில் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டையை வலிமைப்படுத்தி வளப்படுத்திட விடுத்த இலக்கியச் சான்றுகள், வரலாற்றுச் சான்றுகள், தத்துவ விளக்கங்கள், கலையுலக விளக்கங்கள் முதலியவை அனைத்தும் வீணுகி விட்டன, வீணுகி விட்டன, வீணுகி விட்டன.

அதற்குக் காரணம், பெரும்பாலான இளைஞர்களிடம் தாங்களே தலைவர், தங்களுக்கே எல்லாம் தெரியும், தங்களின் சொற்படிதான் மற்றவர்கள் கேட்க வேண்டும், தாங்கள் நினைப்பதும் செய்வதும்தான் சரி; தங்களுக்குத் தலைவர் தேவையில்லை, கொள்கை தேவையில்லை, குறிக்கோள் தேவையில்லை, தத்துவம் தேவையில்லை, செயல்சித்தாந்தம் தேவையில்லை, எந்த ஒரு பயிற்சியும் தேவையில்லை, எவருடைய துணையும் தேவையில்லை, ... என்ற காட்டுமிராண்டித்தனமான, முரட்டுத் தனமான, கண்மூடித்தனமான, மடமைமிகு மூடநம்பிக்கைப் போக்குகள்

நிறைந்து கிடப்பதுதான், நிறைந்து கிடப்பதுதான், நிறைந்து கிடப்பதுதான் ஆகும்.

இப்பேருண்மையினைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து தெளிந்த குருதேவர்; இப்பேருண்மையினை தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிவதால் எந்தப் பயனும் கிடையாது என்று துணிந்து முடிவெடுத்தார். அம் முடிவின் காரணமாகத்தான் இந்நாட்டின் இளைஞர்களை விட்டுவிட்டு, **சிறுஅர்களையும், முதியோர்களையும், மகளிர்களையும் மட்டுமே ஒன்றுதிரட்டி கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கங்கள் (க.ப.சி.அ.) நடத்த ஆரம்பித்தார், ஆரம்பித்தார், ஆரம்பித்தார்.**

10. இந்தக் கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கத்தில் மிகத் தெளிவாகத் *'தமிழர்களுடைய தமிழ்மொழி உணர்வு, இலக்கிய ஆர்வம், இனப்பற்று, நாட்டுப் பண்பாட்டுப் பிடிப்பு, தமிழனின் கலை ஆச்சார (கலாச்சார) வாழ்வியல் மதிப்பீட்டு நோக்கு, ... முதலிய அனைத்தும் செத்துப் போய்விட்டன! செத்துப் போய்விட்டன!! செத்துப் போய்விட்டன!!! செல்லரித்துப் போய்விட்டன! செல்லரித்துப் போய்விட்டன!! செல்லரித்துப் போய்விட்டன!!! மாண்டு மடிந்து மக்கிப் போய்விட்டன! மாண்டு மடிந்து மக்கிப் போய்விட்டன!! மாண்டு மடிந்து மக்கிப் போய்விட்டன!!!'* என்ற பேருண்மையை அடிப்படை உயிரோட்டமாகக் கொண்டே செயல்நிலைகளை வகுத்துள்ளார்.

இதன்படிதான், தமிழர்களை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து தட்டி எழுப்புவதற்காக, தமிழர்களுடைய மத வரலாறுகளையும், மத இலக்கியங்களையும், மத அருளாளர்களின் வாழ்வியல்களையும், போதனைகளையும், சாதனைகளையும், பூசைமொழிகளையும், பூசைவிதிகளையும், தத்துவங்களையும், செயல்சித்தாந்தங்களையும், கோயில் விஞ்ஞானங்களையும், கோயில் சார்ந்த கலைகளையும், கலைஞர்களையும், மதத் தலைவர்களையும், தொண்டர்களையும், மதம் சார்ந்த பழைய புதிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களையும்; பதினெண்சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச்

சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் வழங்கியுள்ள சான்றுகளையும், ஊன்றுகளையும் துணையாகக் கொண்டு அருளுரைகளாகவும், அறிவுரைகளாகவும், அருளார்ந்த அறிவுரைகளாகவும், அறிவார்ந்த அருளுரைகளாகவும் வழங்கி வருகிறார்.

11. **இதற்காகத்தான் குவலய குருபீடம், நிறையக்ஞர், பரபிறம்மம், அண்டபேரண்ட அருதி ஆதிசத்திகள் சன்னிதானம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அருட்கொடை வள்ளல், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் இன்றைய சமய, சமுதாய, கலை, இலக்கியத் துறைத் தலைவர்களையோ, நிறுவன நிர்வாக அமைப்புக்களின் கொள்கைகளையோ, குறிக்கோள்களையோ, செயல்திட்டங்களையோ விமரிசிக்க முற்படுவதில்லை, விமரிசிக்க முற்படுவதில்லை, விமரிசிக்க முற்படுவதில்லை, விமரிசிக்க முற்படுவதேயில்லை; இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.**

**குறிப்பு**:- அதாவது நமது குருதேவர் தன்னைச் சுற்றியுள்ள அனைவரிடமும் மிகமிகத் தெளிவாகவும், நேரிடையாகவும்,...; **"... தம்மைப் பொறுத்தவரை, தாம் நிகழ்த்தவிருக்கும் எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, கருத்துப் புரட்சி, தத்துவப் புரட்சி, கலைப்புரட்சி, இலக்கியப் புரட்சி, ... முதலிய அனைத்துப் புரட்சிகளும் இந்த நாட்டில் உள்ள அனைத்து வகைப்பட்ட அனைத்து வகை தர, திர, திறப்பட்ட தனிமனிதர்களையும், நிறுவன நிர்வாக அமைப்புக்களையும், தலைவர்களையும் தமக்குத் துணையாக்கிக் கொண்டுதான் செய்யப் போவதாக, செய்ய விரும்புவதாக" அறிவித்துள்ளார். எனவேதான், இவர் எவர் மனதையும் எள்முனையளவு கூடப் புண்படுத்தாமல்**; தாம் கூற விரும்புவதை மட்டுமே நறுக்குத் தெறித்தாற்போல, எவ்விதப் பிசிருமில்லாமல் விளக்கி வருகிறார்.

இப்படி இவர் செயல்படுவதால் இன்றைய இளைஞர் சமுதாயமும், ஒருசில மடமைமிகு பகுத்தறிவாளர்களும், ஒருசில கண்மூடிப் போக்குடைய சீர்திருத்தவாதிகளும், ஒருசில கட்சி வெறிபிடித்த அரசியல்வாதிகளும், ... நமது குருதேவரை மத வெறியர் என்று முத்திரை குத்தி ஒதுக்கவும், பதுக்கவும், புறக்கணிக்கவும், வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும், பகைக்கவும், நகைக்கவும் முற்படுகிறார்கள், முற்படுகிறார்கள், முற்படுகிறார்கள், முற்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஆனால், நம் குருதேவரோ! தாம் செய்யவிருக்கும் பல்வேறு-வகையான புரட்சிப்பணிகளை இவர்களையெல்லாம் துணையாக்கிக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்ற மிகப்பெரிய பரந்த விரிந்த தத்துவப் பெருநோக்கையே பெற்றிருக்கிறார். எனவேதான், **தனது புரட்சிப் பாதையில், புதுமைப் பாதையில், புத்துயிர்ப்புப் பாதையில் முட்புதர்களாகவும், பாறுங்கற்களாகவும் இருக்கின்றவர்களைக் கூடப் பாதையை விட்டு அகற்றி விடாமல் புரட்சிப் பாதையில் அவைகளும் பயன்படுமாறு அல்லது அவைகளையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு செயல்திட்டங்களை உருவாக்கி வருகிறார்.**

12. இவற்றின் விளக்கமாகத்தான் நமது குருதேவர் **கால் நூற்றாண்டுக் காலமாக** ஊர்பேர் தெரியாத அல்லது தெரிந்து கொள்ளாத நிலையில்; கிராமங்களுக்கிடையில், தெருக்களுக்கிடையில், குடிசைகளுக்கிடையில், மாளிகைகளுக்கிடையில் புயலெனச் சுழன்று, எரிமலையெனக் குமுறி, கடலின் பெருமுழக்கம் போல் கருத்து விளக்கங்களை வழங்கி வழங்கி திரட்டிய இளைஞர் கூட்டம் புகழ் விரும்பிகளாகவும், பொருளாசை மிக்க பதவி வெறியர்களாகவும், பொழுதுபோக்கை நாடும் போலிகளாகவும் மாறிக் குருதேவரை விட்டு விலகி விலகிச் சென்றுவிட்ட சோக வரலாறுகளைச் சொல்லிச் சொல்லி; இன்றைக்குத் **தம்மிடம் வருகின்ற இளைஞர்களையும், முதியோர்களையும் முழுக்க முழுக்க மத அறிவும், மதப் பயிற்சியும், மதத் தேர்ச்சியும், மத**

**<u>நுகர்ச்சியும், ... மிகுதியாக உடைய மதவழி முயற்சியாளர்களாகவே உருவாக்க முற்படுகிறார், உருவாக்க முற்படுகிறார், உருவாக்க முற்படுகிறார்.</u>** இதில் ஏற்படுகின்ற வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படவில்லை, கவலைப்படவில்லை, கவலைப்படவில்லை, கவலைப்படவே இல்லை.

13. இவற்றால்தான் தாம் செய்யவிருக்கும் புரட்சிகளுக்கு அடிப்படையாக இருக்கும் இந்துமதத்தை; முறையான மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் அடையச் செய்வதற்காக முழுக்க முழுக்க மதத்துறைக்குத் தேவையான அனைத்து வகைப்பட்ட புதிய புதிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்காக **<u>இந்து மறுமலர்ச்சி இயக்கம்</u>** (இ.ம.இ. - I.M.I.) என்ற நிறுவன நிர்வாக அமைப்பைத் தோற்றுவித்துள்ளார். இதன்படி தனிமனிதர்களையும், குடும்பங்களையும் சிறந்த அருளாளர்களாக, அருட்கலைஞர்களாக, இந்துமதச் செல்வர்களாக, இந்துமதச் செயல்வீரர்களாக, இந்துமதத் தலைவர்களாக, இந்துமதத் தொண்டர்களாக தயாரிக்கும் பணியை இந்து மறுமலர்ச்சி இயக்கம் செய்கிறது. இதைத் தங்களைப் போன்றோராவது முழுமையாகப் புரிந்து வெளியுலகிற்குப் புரிய வைக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.

அதாவது, 'இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான தனிமனிதர்களையும், குடும்பங்களையும் இந்துமத வழியில் எண்ணப் புரட்சிக்கும், சிந்தனைப் புரட்சிக்கும், கருத்துப் புரட்சிக்கும், தத்துவப் புரட்சிக்கும் உரியவர்களாக தயாரிக்கும் பணியில்தான் ஈடுபட்டிருக்கிறது, ஈடுபட்டிருக்கிறது, ஈடுபட்டிருக்கிறது; ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது, ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது, ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.' ஏனென்றால், நமது குருதேவர் இந்த நாட்டில் செய்ய விரும்புவதெல்லாம் ஒரு பண்பாட்டுப் புரட்சியேயாகும், ஒரு பண்பாட்டுப் புரட்சியேயாகும், ஒரு பண்பாட்டுப் புரட்சியேயாகும்.

அதுவும் **நமது குருதேவர் தாம் நிகழ்த்தப் போகும் பண்பாட்டுப் புரட்சி (The Cultural Revolution) நமது தமிழக மக்களின் வாழ்வியல் மதிப்பீடுகள் அனைத்திலும் மலர்ச்சிமிகு கிளர்ச்சிகளை வளவளர்ச்சி பெறச் செய்து உயர்ச்சிமிகு செழிச்சியினை ஆட்சிக்குக் கொண்டு வரும் '<u>முழுமையான பண்பாட்டுப் புரட்சியாக</u>' (The Total Cultural Revolution) நிகழ்த்திடவே விரும்புகிறார், நிகழ்த்திடவே விரும்புகிறார், நிகழ்த்திடவே விரும்புகிறார்.**

14. இவற்றையெல்லாம் ஆழச் சிந்தித்து, நீள நினைத்துத்தான் நமது குருதேவர், நம் நாட்டில் உள்ள மத வாதிகள், மத மறுப்பாளர்கள், மத வெறுப்பாளர்கள், மத எதிர்ப்பாளர்கள், நாத்திகர்கள், மதச் சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவுவாதிகள், மேல்நாட்டு விஞ்ஞான மோகிகள், பிறநாட்டு நாகரிக வெறியர்கள்; தாய்நாட்டு மதவழி வாழ்வியல் துரோகிகள், விரோதிகள்; தமிழ்நாட்டு மதக் கோயில்கள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றைத் திருடி விலைக்கு விற்கும் பொருள் வெறியர்கள்; எம்மதமும் சம்மதம் என்று வாழும் அப்பாவிகள், ஏமாளிகள், கோமாளிகள், ... முதலிய அனைவரையுமே மதித்து! மதித்து!! மதித்து!!! விரும்பி! விரும்பி!! விரும்பி!!! நாடித் தேடி, நாடித் தேடி, நாடித் தேடி ... ஓடி ஓடிச் சந்திக்கிறார்! ஓடி ஓடிச் சந்திக்கிறார்!! ஓடி ஓடிச் சந்திக்கிறார்!!! ஆனால், நல்லவர்கள் நினைப்பதுதான் நடப்பதில்லை நம் தாய்த் திருநாட்டில்....???....!!!

அதாவது, **<u>ஏறத்தாழ எல்லா நிறுவனங்களும்; தலைவர்களாகவும், தொண்டர்களாகவும் இருக்கின்ற எல்லா தனிமனிதர்களும் தங்களுக்கென்று தனிப்பட்ட வாழ்வு வேண்டும்! தங்களுக்கென்று தனிப்பட்ட தலைமை வேண்டும்! தங்களுக்கென்று தனிப்பட்ட புகழ், பதவி, பணம், பட்டம், பொழுதுபோக்கு, ... முதலியவைகள் எல்லாம் வேண்டும்!</u>** என்ற மிகமிகக் குறுகிய வெறி நோக்கிலும்,

போக்கிலும்தான் வாழுகின்றுர்கள்! வாழுகின்றன! வாழுகின்றுர்கள்!! வாழுகின்றன!! வாழுகின்றுர்கள்!!! வாழுகின்றன!!!

15. மேற்படி பேருண்மைகளையெல்லாம் உணர்ந்து உணர்ந்து, சிந்தை நொந்து நொந்து, மனம் வெந்து வெந்து, செயல்பாடுகள் நைந்து நைந்து திருமடத்துக்குள்ளேயே தமது அனைத்து வகைச் செயல்நிலைகளையும் சுருக்கிக் கொண்டார், சில காலமாக, சில காலமாக, சில காலமாக. **ஆனால், நமது குருதேவர் கடந்த சில ஆண்டுகளில் நம் தமிழர்களின் எண்ணிக்கையான (7½) ஏழரைக் கோடியை விடப் பல மடங்கு அளவுள்ள அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் கோடிக்கணக்கில் அச்சிட்டு கோடை மழை போலவும், காட்டாற்று வெள்ளம் போலவும் தமிழகம் முழுவதும் வழங்கிய காரணத்தினுல்!; தமிழகம் முழுவதும் வழங்கிய காரணத்தினுல்!!; தமிழகம் முழுவதும் வழங்கிய காரணத்தினுல்!!!;... சற்றும் எதிர்பாராமல் தங்களைப் போன்ற பேரார்வம் மிக்க, தன்னம்பிக்கை நிறைந்த தமிழின மொழி நாட்டுப் பற்றுடைய வீரதீரம் மிக்க இளைஞர்கள் குருதேவரை நாடித் தேடி வர ஆரம்பித்து விட்டார்கள், குருதேவரை நாடித் தேடி வர ஆரம்பித்து விட்டார்கள், குருதேவரை நாடித் தேடி வர ஆரம்பித்து விட்டார்கள்.**

16. இப்படி, **குருதேவரை நாடித் தேடி ஓடி வந்து கொண்டிருக்கின்ற வீர தீர இளைஞர்களுக்கிடையிலே மத அறிவும், அக்கறையும், ஆர்வமும், நம்பிக்கையும், ஈடுபாடும் கணிசமான அளவு குறைந்தும், நலிந்தும், மெலிந்தும், நைந்தும், தேய்ந்தும், ஓய்ந்தும், சிதைந்து சீரழிந்தும்,... இருப்பதைக் கண்டறிந்தார் குருதேவர், இருப்பதைக் கண்டறிந்தார் குருதேவர், இருப்பதைக் கண்டறிந்தார் குருதேவர்.** அதாவது, நமது குருதேவர் அருட்கொடை வள்ளலாக, இந்து வேத நாயகமாக, இந்து மதத் தந்தையாக, அந்தணர் அண்ணலாக மட்டும் செயல்படாமல்; ஞானத்தந்தையாக, ஞானவேந்தராக, தமிழ் மெய்ஞ்ஞான சபைத் தலைவராகவும் பொறுப்பேற்றுச் செயல்படுகின்ற

காரணத்தினுல், காரணத்தினுல், காரணத்தினுல்; தம்மை நாடித் தேடி ஓடி வந்து கொண்டிருக்கும் இளைஞர்களுக்கிடையே உள்ள மதத்துறையில் விருப்பமற்ற நோக்கையும், போக்கையும் புறக்கணித்து ஒதுக்கி விடாமல்; இவர்களைத் தாம் விரும்பும் பண்பாட்டுப் புரட்சியில் ஈடுபடுத்துவதற்காக; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல், இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலேயே; இதைத் தோற்றுவித்த கரூர் பசுபதீசுவரர் கோயிலை **விரிவாக்கிக் கட்டிய** அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் சமுதாயத் துறைக்காகவும், அரசியல் துறைக்காகவும் தோற்றுவித்திட்ட ***'இந்து முன்னேற்றக் கழகம்'* (இ.மு.க. - I.M.K.) என்ற அமைப்பை மீண்டும் தோற்றுவித்துள்ளார், மீண்டும் தோற்றுவித்துள்ளார், மீண்டும் தோற்றுவித்துள்ளார்**.

17. அதாவது, *'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் இருப்பவர்கள் குருதி வண்ணச் செவ்வாடை, உருத்திராக்க மாலை, அக்குமணி மாலை, முடிகயிறு, தாயத்து, சன்னிதான உடை, திரிசூலம், மெய்ஞ்ஞானக்கொடி, மயில் பீலி, ... முதலியவைகளையெல்லாம் துணையாகக் கொண்டுதான் செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும்'*... என்றுள்ள கடுமையான, கட்டுப்பாடான விதிகளையெல்லாம் தளர்த்தி; *'ஏதேனும் ஒரு செவ்வாடை அல்லது சிவப்புத் துண்டு அல்லது மெய்ஞ்ஞானக் கொடியை அன்றாட வாழ்வியலில் ஏற்றுச் செயல்பட்டால் போதும்'* என்ற கொள்கையை உடைய, செயல்நிலையை உடைய **இந்து முன்னேற்றக் கழகத்தை** அறிவித்துள்ளார் குருதேவர், அறிவித்துள்ளார் குருதேவர், அறிவித்துள்ளார் குருதேவர்.

18. இப்படிக் குருதேவர் அறிவித்துள்ள இந்து முன்னேற்றக் கழகம் (இ.மு.க. I.M.K.) முழுக்க முழுக்க சமுதாயத்தையும், அரசியலையும் சந்திக்க!, சந்தித்துச் சிந்திக்க!, சிந்தித்ததை பிறரிடம் துணிவாக எடுத்துக் கூற!, பிறரிடம் கூறியதை செயலாக்கிக் காட்டிடத் தயாராக உள்ள ஒரு நிறுவன நிர்வாக அமைப்பாகும். அதாவது, இந்த 'இந்து முன்னேற்றக் கழகம்' சமுதாயத் துறையிலும், அரசியல் துறையிலும் இந்து வேத வழிக் கருத்துக்களாலும், இந்து மத வழிக் கருத்துக்களாலும், நடைமுறைகளாலும் **புதுமைகளை விளைவிக்க முயல்கிறது! புதுமைகளை விளைவிக்க முயல்கிறது! புதுமைகளை விளைவிக்க முயல்கிறது!** இதற்குத் தேவையான ஊழியர்களையும், ஊழியக்காரர்களையும், ஏந்தாளர்களையும், ஆர்வலர்களையும், ஆதரவாளர்களையும் தயாரிப்பதற்காகத்தான் குருதேவர் கட்டிடங்களுக்குள் கூட்டங்களை (Hall Meetings) ஊர் ஊராக நிகழ்த்தி வருகிறார்! ஊர் ஊராக நிகழ்த்தி வருகிறார்!! ஊர் ஊராக நிகழ்த்தி வருகிறார்!!! இப்போது.

ஏனென்றால், **இன்றைய நமது நாட்டு நிலையில் அரசியல் பேச்சாளார்களும், ஏச்சாளர்களும்; சமய சமுதாய பேச்சாளர்களும், ஏச்சாளர்களும்; எதற்குமே பயன்படாத இலக்கியச் சொற்பொழிவுகளிலும், பட்டிமன்றங்களிலும் பங்கு பெறும் *கிளிப் பிள்ளைப் பேச்சாளர்*களும்; எதையுமே சாதிக்காமல் மக்களின் கருத்தையும், காலத்தையும் வீணாக்கும் புராண இதிகாச விரிவுரையாளர்களும் பொதுமேடைச் சொற்பொழிவுகளுக்கு ஆற்றலே இல்லாமல் செய்து விட்டார்கள்! பொதுமேடைச் சொற்பொழிவுகளுக்கு ஆற்றலே இல்லாமல் செய்து விட்டார்கள்!! பொதுமேடைச் சொற்பொழிவுகளுக்கு ஆற்றலே இல்லாமல் செய்து விட்டார்கள்!!!**

19. இப்பேருண்மையினை உணர்ந்துதான் நமது குருதேவர் பொதுமேடைகளில் பேசுவதை நிறுத்திக் கொண்டு வருகிறார்! இலக்கிய

விழாக்களையும், பட்டிமன்றங்களையும், கருத்தரங்குகளையும், சொற்பொழிவுகளையும் பயனற்றவை என்று கண்டித்து வருகிறார்!; சமய விழாக்களையும், புராண இதிகாச விரிவுரைகளையும் புதுமைப் படுத்த வேண்டும் என்ற சீர்திருத்தத்தை கூறுகிறார்!; சமுதாய சீர்திருத்தப் பேச்சாளர்களையும், பேச்சுக்களையும், அரசியல் கூட்டங்களையும், மாநாடுகளையும், ஊர்வலங்களையும் தங்களுடைய நோக்கையும், போக்கையும், ஊக்கையும் பற்றிய மறுசிந்தனைகளைச் (Rethinkings) செய்ய வேண்டும் அவர்கள் என்று அறிவுரை கூறுகிறார்! ... **கூடுமானவரை இன்றைய சமய, சமுதாய, அரசியல், இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதைப் பயனற்ற செயலாகக் கருதி இவற்றிலிருந்து ஒதுங்கி, ஒதுங்கி, ஒதுங்கி, விலகி, விலகி, விலகி தமது நிலையான முடிவுகளை நிதானமாகவும், சமாதானமாகவும் மெல்ல மெல்லச் செயலாக்குவதில் ஈடுபட்டுள்ளார்**.

அதாவது, எல்லோரையுமே ஒருங்கிணைக்கக் கூடிய அன்பு வழியில், அருள் வழியில், அற வழியில், அமைதி வழியில் நிதானப் போக்கிலும், சமாதானப் போக்கிலும் செயல்பட்டாவது ‘மூட்டையை அவிழ்த்துக் கொட்டப்பட்ட பெரு நெல்லிக்காய்கள் சம தளத்தில் நாலாபக்கமும் சிதறி ஓடுவது போல் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக, தன்னல வெறியோடு தனித்துச் செயல்படும் அகம்பாவ ஆணவப் போக்கால் ஒற்றுமையின்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழர்களை’ ... *(இது குருபாரம்பரிய வாசகம்)* **ஒற்றுமைப்படுத்த முயலுகிறார் நமது குருதேவர்! ஒற்றுமைப்படுத்த முயலுகிறார் நமது குருதேவர்!! ஒற்றுமைப்படுத்த முயலுகிறார் நமது குருதேவர்!!!**

20. இவற்றையெல்லாம் தங்களைப் போன்றோர் முழுமையாகப் புரிந்திட இவ்வஞ்சலைப் பலமுறை திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். இவற்றையெல்லாம் பலருக்கும் புரிய வைப்பதற்காக இந்த அஞ்சலைப் பலருக்கும் திரும்பத் திரும்பப் படித்துக் காட்ட வேண்டும். முடிந்தால்

இந்த அஞ்சலுக்கு பல இயந்திர நகல்கள் (Xerox Copies) தயாரித்துப் பலருக்கும் வழங்குங்கள். இன்னும் முடிந்தால், இந்த அஞ்சலை உங்களுடைய வசதி வாய்ப்புக்களுக்கேற்ப சிறிய நூலாக அச்சிட்டுக் கூட விலைக்கு விற்கலாம்; குருதேவரிடம் கொடுத்தால் மடத்திலும் விற்றுத் தரப்படும்.

21. தாங்கள் குருதேவரை வரவழைக்க விரும்புவது மெய்யானால், முடியுமானால், சில ஆயிரங்கள் செலவழிப்பதற்கு வசதி வாய்ப்புக்கள் இருக்குமேயானால்; தங்களுடைய நண்பர்களையும், தோழர்களையும், ஆதரவாளர்களையும், ஏந்தாளர்களையும், இந்துமதத்தில் பற்றும் பாசமும் உடையவர்களையும், சித்தர் நெறியில் ஈடுபாடு உள்ளவர்களையும், தங்கள் சித்த மருத்துவ சங்கத்தினர்களையும், உங்கள் வட்டாரத்து மக்களையும் அவசர அவசியமாக ஒன்றுதிரட்டிச் சந்தித்துக் கலந்து பேசி முடிவெடுங்கள். அம்முடிவைச் சொல்லுவதற்கு உடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது நேரில் வாருங்கள். முடிந்தால் நேரிலோ அல்லது பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை (Pathinen Siddhar Madam - Trust), State Bank of India, பொன்னேரி என்ற பெயருக்கு கேட்பு வரைவு ஓலையோ (Demand Draft) ரூ.2000/- வழங்க வேண்டும். ஏனென்றால், திருமடத்திலிருந்து நான்கு பேர்களாவது குருதேவருடன் துணைக்கு வருவார்கள். குருதேவரும் சுற்றுப்பயணம் புறப்படுவதற்கு முன்னால் பொன்னேரியிலுள்ள பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை இருப்பிடத்திலும், அம்பத்தூரில் உள்ள பதினெண்சித்தர் திருச்சபை இருப்பிடத்திலும், காரணைடையிலுள்ள பதினெண்சித்தர் மடக் கருகுலத்திலும் பூசைகள் சில செய்துதான் புறப்பட வேண்டியிருக்கும். இவற்றிற்கெல்லாம் குறைந்தது ரூ.2000/-த்திற்கு (இரண்டாயிரம்) மேல்தான் செலவாகும்.

22. குருதேவர் சுற்றுப்பயணம் வந்தால் இரண்டு அல்லது நான்கு நாட்கள் தங்குவார். ஊழியர்களுக்குரிய கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கத்தை (க.ப.சி.அ.) கட்டிடடத்திற்குள் மற்றவர் தலையீடு இன்றி (Hall Meeting) நடத்துவார்; பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப அருளுரை ஆற்றுவார்; அருட்கணிப்புக்கள் கூறுவார்; பாதிப்புக்களுக்குப் பரிகாரம் செய்வார்; தனிமனிதர்களின் தேவைகளுக்கேற்ப உருத்திராக்கம், முடிகயிறு, தாயத்து, சக்கரம், ... முதலியவை வழங்குவார். அருள்நலம் குன்றிய கோயில்களுக்குப் புத்துயிர்ப்பு செய்வார்; விரும்புகின்ற தனிமனிதர்களின் இருப்பிடங்களுக்கு பதினெண்சித்தர் மடத்தின் மரபுப்படி திருக்கூட்டத்தாருடன் எழுந்தருளுவார்; இந்துமத மறுமலர்ச்சிக்காக ஐய வினாவோ, அறிவு வினாவோ கேட்பவர்களுக்கு நேருக்கு நேர் வினா விடை நிகழ்ச்சியினை நிகழ்த்துவார்; ... எனவே, திருமடத்துக்கும் பயனுண்டு, தங்களுக்கும் பயனுண்டு.

23. இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கும், இந்து முன்னேற்றக் கழகத்திற்கும் பதினெண்சித்தர் மடத்தின் இந்து வேத இந்து மத விளக்கக் கொடியான மெய்ஞ்ஞானக்கொடிதான் கொடியாக அறிவிக்கப்-பட்டிருக்கின்றது என்பதால்; இ.ம.இ.யின் கிளைகளுக்கும், இ.மு.க.வின் கிளைகளுக்கும் மெய்ஞ்ஞானக் கொடிகள் எங்கெங்கு ஏற்ற வேண்டுமோ அங்கெல்லாம் வந்து கொடிகளை ஏற்றித் தருவார் குருதேவர். எனவே, தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் உரிய இ.ம.இ.யை வளர்ப்பதற்கும்; சமுதாயத்தையும், அரசியலையும் செம்மைப்படுத்துவதற்குரிய இ.மு.க.வை வளர்ப்பதற்கும் குருதேவரின் வருகை பயன்படும்.

24. இந்த 1992 மார்ச்சு மாதம் 27.3.92 வெள்ளி மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் சனிக்கிழமை 28.3.92 காலை கரூர் வந்து தொடர்ந்து மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு

அதாவது 30 திங்கள் முடிய அல்லது 31 செவ்வாய் முடிய உங்கள் வட்டாரத்தில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்ப குருதேவர் தயாராக இருக்கிறுர். இந்தத் தேதியைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிஞல் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!
ஓம் தென்ஞடுடைய சீவனே போற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

**பதினெண்சித்தர் மடம்,**

**17-3-1992.**

அஞ்சல் திருவோலே நாயகம்:

அருள்மிகு பச்சைமலே வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் இரா.சீனிவாசன்.

**// உண்மை நகல் //**
**// இதன் மூல நகல்: சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

**குருவாக்கியங்கள்**

"உலகம் பழிப்பதை ஒழித்து விடு!"
"உலகம் உவப்பப் பிறரோடு கூடி வாழ்ந்திடு!"
"பிறரின் பொருமைக்கு உள்ளாகிடாதே!"

ஓம் குருவே துணை!

# அருளாளர்களும் அருட்குடும்பங்களும் ஊர் தோறும் தோன்ற வேண்டும்!

21-3-1992.

பெறுநர்:-

திருவருட் செல்வர் M. சோமசுந்தரம்
48, செட்டி தெரு, இரண்டாவது மாடி,
கிருட்டிணபுரம், ஆம்பூர் - 636802.

அனுப்புநர்:-

பதினெண்சித்தர் மடாதிபதி, இந்து மதத் தந்தை
இந்து வேத நாயகம், இந்து மதத்தின் தலைமை ஆச்சாரியார்,
இந்து வேதக் குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
அம்பத்தூர், சென்னை - 53.

இந்துமதக் கடலில் முத்தாக விளைந்துள்ள திருவருட்செல்வர் M.சோமசுந்தரம் அவர்களே!

1) தாங்கள் குருபீடத்திற்கு அனுப்பிய அஞ்சல், தங்களுக்கே திரும்பி வந்ததை அப்படியே மீண்டும் மற்றோர் அஞ்சல் உறைக்குள் வைத்து அனுப்பியமை பாராட்டுவதற்கு உரியது. அதாவது, தாங்கள்

பொறுப்போடு 4-3-1992இல் அஞ்சல் எழுதியும் எதிர்பாராமல் தாங்கள் எழுதிய முகவரிப் பிழையினால் அது தங்களுக்கே திரும்பி வந்து விட்டது. முதலில் முகவரியில் அம்பத்தூர் எழுதப்பட வில்லை. சென்னை - 600053 என்று போடவில்லை. இது தாங்கள் எதையும் சான்றுகளுடனும், ஊன்றுகளுடனும் (With proves and evidences) விளக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர் என்று தெரிகிறது.

2) தாங்கள் அனுப்பியுள்ள பஞ்ச புராணம் புத்தகங்கள், இராகு கால அட்டவணைகள் இரத்தினச் சுருக்கமாகவும்; எளிதாக சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளக் கூடியதாகவும் வடிவமைப்பைப் பெற்றிருப்பதைக் கண்டு குருபீடம் மிகவும் மகிழ்ந்தார். எனவே, தாங்கள் எந்தக் கருத்தையும், செயலையும் பிறர் எளிதில் பயன்படுத்தும் வண்ணம் இரத்தினச் சுருக்கமாக வெளியிடுவதில் ஆர்வமும், நம்பிக்கையும் உள்ளவர் என்ற பேருண்மை புலனாகி இருக்கிறது.

3) தாங்கள் அஞ்சல் தொடர்புக்காக 'அஞ்சல் தலை முன் கட்டணப் பதிவு முறை' (Pre-paid System) பெற்றுள்ளீர்கள் என்ற விவரம் **தாங்கள் தனிமனிதரல்ல;** தங்களைச் சுற்றியும் தங்களுக்கு முன்னும் பின்னும் கணிசமான அளவினர் வாழ்கின்றார்கள் அல்லது இயங்குகின்றார்கள் என்ற பேருண்மையை விளக்குகிறது. இவற்றால் இதன் அடிப்படையில் தலைவர், குருதேவர், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், இந்துவேத பாடசாலை இயக்குநர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் தங்களைப் பற்றிய முழுமையான விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார். அன்புகூர்ந்து இந்த விருப்பத்தைப் புரிந்து; விரிவான அஞ்சல் தொடர்பு கொள்க.

**குறிப்பு:-** வெள்ளிக் கிழமை இரவு முதல் ஞாயிறு பிற்பகல் 12.00 மணி வரை குருபீடத்தோடு அம்பத்தூருக்குத் தொலைபேசியில் (654447) தொடர்பு கொள்ளலாம் அல்லது அம்பத்தூருக்கே நேரில்

வரலாம். ஆனால், குருபீடம் சுற்றுப்பயணம் சென்றிருக்கிறாரா? இல்லையா? என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு செயல்பட்டால் நல்லது. குருபீடம் திங்கள் கிழமை காலை முதல் வெள்ளிக் கிழமை மாலை வரை பொன்னேரியில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியின் (L.N.G. College) முன்வாசல் அருகில் உள்ள பாரத் கம்ப்யூட்டர் சென்ட்டர் அருகில் இயங்கும் பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை, 3, தென்றல், N.G.O. நகர் என்ற முகவரியில் இருப்பார். இவற்றைப் புரிந்து குருதேவரைப் பார்க்க வருக. ஏனென்றால், உங்கள் பயணம் வீணாகி விடக் கூடாது.

4) இந்துவேதம் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் நான்கு உகங்களுக்கு முன்பே வழங்கப்பட்டிருக்கின்றது என்ற பேருண்மையினையும்; குமரி முதல் இமயம் வரை உள்ள எல்லாக் கோயில்களிலும் தமிழ்மொழியில் உள்ள பூசைமொழிகளும், பூசைவிதிகளும்தான் நெடுங்காலமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றன, வருகின்றன என்ற பேருண்மையினையும்; இந்து மதம் வேறு ஹிந்து மதம் வேறு என்ற பேருண்மையினையும்; முதலில் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் மூலவர்களாக, முதல்வர்களாக, காவலர்களாக, வாரிசுகளாக, வித்துக்களாக, கருவூலங்களாக, காப்பகங்களாக, நாயகங்களாக விளங்குகின்ற தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் அல்லது புரிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இந்து வேதமும், இந்து மதமும் பிழைத்து, முளைத்து, கிளைத்து, தழைத்து, செழித்து ஓங்க முடியும்.

இதற்காகவே நமது அருட்கொடை வள்ளல், ஞானவள்ளல், ஞானவேந்தர், நிறையக்ஞர், பரபிறம்மம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட கால இடைவெளியில் **குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம்,**

**சித்தர் கருவூரார் அருட்கோட்டங்கள், சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றங்கள், சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள்**, ... முதலிய நிறுவன நிர்வாகங்களை எல்லாம் உண்டாக்கி; நாடு முழுவதும் இந்துமத ஆர்வலர்களையும், ஆதரவாளர்களையும், ஈடுபாட்டாளர்களையும், ஏந்தாளர்களையும், அருட்கலைஞர்களையும்; இந்து மதத்திற்காகப் பரிந்து பேசக் கூடிய **'சோதகர்'**, **'சாதகர்'**, **'போதகர்**, **'வாதகர்'** எனும் நான்கு வகையினரையும் படித்தவர்களுக்கிடையிலும், படிக்காதவர்களுக்கிடையிலும், ஏழைகளுக்கிடையிலும், பணக்காரர்களுக்கிடையிலும், தாழ்ந்தவர்களுக்கிடையிலும், உயர்ந்தவர்களுக்கிடையிலும், ... பரவலாக உருவாக்கினர், உருவாக்கினர், உருவாக்கினர்.

இதன் விளைவாகத்தான் <u>இன்றைக்கு நம் நாட்டில் உள்ள சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் துறைகளும்; இத் துறைகளுக்குரிய கட்சி, கழகம், மன்றம், சங்கம், சபை, இயக்கம், ... முதலிய நிறுவன நிர்வாகங்களும் பெரும்பாலும் நாத்திகர், மதமறுப்பாளர், மத வெறுப்பாளர், மதத் துரோகி, மத விரோதி முதலியவர்களால் அதிக அளவில் ஆட்சிநிலைகளைப் பெற்று விட்டன</u> என்ற நிலையைக் கண்டிக்கத் துணிவாக **இந்து மறுமலர்ச்சி இயக்கம்** (இ.ம.இ. I.M.I.), **இந்து முன்னேற்றக் கழகம்** (இ.மு.க. I.M.K.) என்ற இரண்டு நிறுவன நிர்வாகங்களை இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் காப்பாற்றும் இரு கால்களாக செயல்பட விட்டிருக்கிறார்.

5) மேற்படி இரு நிறுவன நிர்வாகங்களும் நமது தாயக மக்களால் பேரார்வத்துடனும், பெரு விருப்பத்துடனும் வரவேற்கப்படுகின்றன என்பது கண்டு எமது குவலய குருபீடம், குருதேவர் சூறுவளிச் சுற்றுப்பயணங்களையும், மின்னல் வேகச் சுற்றுப்பயணங்களையும், **<u>தமிழகத்தின் எல்லைக்குள், தமிழகத்தின் எல்லைக்குள், தமிழகத்தின் எல்லைக்குள்</u>** மட்டும் நிகழ்த்தி வருகிறார். இச் சுற்றுப்பயணங்களில்

கோயில் ஊழியர்கள், ஊழியக்காரர்கள், இந்து மதம் சார்ந்த அருட்கலைஞர்கள், இந்துமதத்தில் ஆழ்ந்த பற்றுள்ள பத்தியாளர்கள், இந்துமத நிறுவனக்காரர்கள், ... முதலியவர்களை நேரடியாகச் சந்தித்து, **'நேருக்கு நேர்'**, **'உடனுக்குடன்'** இந்துமதம் பற்றிய அனைத்து வகையான ஐயங்களையும், ஐய வினாக்களையும், அறிவு வினாக்களையும் அகற்றி வருகிறார். இதன்மூலம், அருளுலக இருள்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும், தேக்க வீக்கங்களையும், அடக்க முடக்கங்களையும், நடுக்க ஒடுக்கங்களையும் வேரோடு, தூரோடு களை எடுத்து வருகிறார், களை எடுத்து வருகிறார், களை எடுத்து வருகிறார். **இதனால், இந்துக்களிடையில்** விழிச்சி நிலை! எழிச்சி நிலை!, பயிற்சி நிலை!, முயற்சி நிலை! உயர்ச்சி பெற்றிருக்கின்றன! உயர்ச்சி பெற்றிருக்கின்றன!! உயர்ச்சி பெற்றிருக்கின்றன!!!

6) எனவே! எனவே! எனவே! மிக விரைவில் இந்துக்களின் மறுமலர்ச்சி!, வளவளர்ச்சி!, வலிமைச் செழிச்சி! உயர்ச்சி பெற்று இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் ஆட்சிமீட்சியைத் தேடித் தரும்! ஆட்சிமீட்சியைத் தேடித் தரும்!! ஆட்சிமீட்சியைத் தேடித் தரும்!!! என்ற நிலை உருவாகி விட்டது, என்ற நிலை உருவாகி விட்டது, என்ற நிலை உருவாகி விட்டது. இவ்வரிய, சீரிய, பெரிய நிலையை நம் தாயகத்தில் எல்லாவகையான நிலைகளிலும் வீழ்ச்சி பெற்றுத் தாழ்ச்சியுற்றுக் கிடக்கின்ற மக்கள் எல்லாம் புரிந்து மலைச்சாரல் வேங்கையெனச் சீறிச் செயல்படப் புறப்பட்டு விட்டார்கள் அல்லது புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

7) **ஆகவே! ஆகவே!! ஆகவே!!! இதுகாறும் இந்து சமயப் போலிகளும், காலிகளும், கூலிகளும், கைக்கூலிகளும், கங்காணிகளும், அப்பாவி ஏமாளிகளும், முட்டாள்களும், மூட நம்பிக்கைக்காரர்களும், வெறியர்களும், ... தொடர்ந்து நமது மதத் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் செயல்பட்டுத்தான் பிறமண்ணினரான பிறமணரான**

**வட ஆரியர்களும்; அவர்களின் சாதி வேறுபாட்டு வர்ணாசிரமத் தருமத்தை உடைய வேத மதமும், சமசுக்கிருத மொழியில் கற்பனாவாதக் கடவுள் கொள்கையை உடைய சமசுக்கிருத வேத சாத்திரங்களின் சனாதன தருமமும், இந்நாட்டுக்கு வந்த மற்ற அன்னிய மொழியினரும், இனத்தவரும், மதத்தவரும் மிகத் துணிச்சலாக எல்லா வழிகளிலும், எல்லா வகைகளிலும் சூழ்ச்சிகள் பல செய்து இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் வீழ்ச்சியுறச் செய்து; தாழ்ச்சியும், இகழ்ச்சியும் அடையச் செய்து விட்டனர் என்பதை உணர்ந்து; இவற்றிற்குப் பரிகாரமாகப் பணிகள் பலவற்றைத் திட்டமிட்டுச் செயலாக்கப் புறப்பட்டிருப்பவரே இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**

8) இன்றைய நிலையில் வகுக்கப்பட்டுள்ள செயல்திட்டத்தின்படி; நமது தாயகத்தில் தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும் முழுக்க முழுக்க இந்து வேத வழியிலும், இந்து மத வழியிலும் மட்டுமே நிகழ்ந்தேறி அருளாளர்களும், அருட்குடும்பங்களும் ஊர் தோறும் விரல்விட்டு எண்ணிடக் கூடிய அளவு தோன்றும்படிச் செய்ய வேண்டும்; தோன்றும்படிச் செய்ய வேண்டும்; தோன்றும்படிச் செய்ய வேண்டும். அதற்காகவே, **இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ. I.M.I.)** ஊர் தோறும் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, இ.ம.இ.யின் உறுப்பினர்கள் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் பெற்றுச் சிறந்த பத்தியாளர்களாகவும், சத்தியாளர்களாகவும், சித்தியாளர்களாகவும், முத்தியாளர்களாகவும் ஆகிடல் வேண்டும்.

இவர்களில் சிலர் அவரவர் விருப்பப்படியும், வசதிப்படியும் அந்தந்த ஊரில் உள்ள கோயில்களிலும், பொது இடங்களிலும் வாரத்தின் சில நாட்களில் அல்லது வாரம் முழுவதும் மாலையில் **சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றம்** என்ற பெயரில் மக்களைக் கூட்டி இந்து வேதம் பற்றியும், இந்து மதம் பற்றியும்,

தமிழ் மொழி பற்றியும், தமிழிலக்கியம் பற்றியும், தமிழர் வரலாறு பற்றியும், தமிழர் பண்பாடு பற்றியும், ... பேசுதல், உரையாடுதல், விவாதித்தல், சொற்பொழிவாற்றுதல், கட்டுரை படித்தல், கவிதை அரங்கேற்றுதல் முதலியவற்றைச் செய்யலாம், செய்ய வேண்டும்.

இதற்காக பதினெண்சித்தர் மடத்திலிருந்து ஆயுள் உறுப்பினர் தொகை (சந்தா) மூன்றே மூன்று ரூபாய் (ரூ.3/-) மட்டும் கட்டி உறுப்பினர் அட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கோயிலிலும் இந்த அமைப்பு இருக்கலாம். ஒவ்வொரு தெருவிலும் இந்த அமைப்பு இருக்கலாம். ஒரே ஊரில் எத்தனை வார வழிபாட்டு மன்றங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஒவ்வொரு வார வழிபாட்டு மன்றமும் அதனுடைய தலைவர், செயலாளர், பொறுப்பாளர், அமைப்பாளர் எனும் நான்கு பேர்கள் பற்றிய முழு விவரங்களை உறுப்பினர் விவரங்களோடு பதினெண்சித்தர் மடத்தில் தெரிவித்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மற்ற விவரங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.

9) அருளை மருந்தாகவும், விருந்தாகவும் பிறருக்கு வழங்க விரும்புகிறவர்கள் தங்கள் தங்களுடைய வசதி வாய்ப்புக்களுக்கேற்ப தங்களுடைய ஊருக்குள் ஒரே ஓர் இடத்திலோ அல்லது பல இடங்களிலோ யாகசாலை அமைத்து மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றிப் பதினெண்சித்தர் மடத்திலிருந்து திரிசூலம், கைக்கொடி, மயில்பீலி, சன்னிதான உடை, உருத்திராக்க மாலை, அக்குமணி மாலை, ... முதலியவைகளைப் பெற்று அன்றாடமோ அல்லது வாரத்தில் ஒரு நாளோ பூசை செய்து அருட்தொண்டு புரியலாம். இதற்காக நேரில் ஒரு சிலமுறை பதினெண்சித்தர் மடம் வந்து பயிற்சி பெற வேண்டும்; திருமடத்திலிருந்து சன்னிதானம், தம்பிரான், ஆதீனம், ஆச்சாரியார், சாத்திரியார், தோத்திரியார், ... முதலியவர்களில் யாரையாவது ஒருவரை உங்கள் ஊருக்கு வரவழைத்து அருட்கோட்டத்தில் அருளேற்றிக்

கொள்ள வேண்டும். பொருளாதார வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஊர் அல்லது வட்டார மக்களின் உதவியோடு பதினெண்சித்தர் மடாதிபதியை அல்லது குருபீடத்தை நேரில் வரவழைத்து அருளுரை ஆற்றவும், அருள் வழங்கவும் செய்யலாம்.

10) ஒவ்வொரு ஊரிலும், அல்லது வட்டாரத்திலும் **அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள்** உண்டாக்க வேண்டும். அதன் உறுப்பினர்களையும்; தலைவர், பொருளாளர், செயலாளர், அமைப்பாளர் முதலியவர்கள் பற்றிய விவரங்களையும் (பதினெண்சித்தர் மடத்தின்) தலைமைப்பீடத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். உள்ளூரில் இந்து வேத நூலகம், இந்து வேத பாடசாலை, இந்து மதப் பயிற்சிப் பள்ளி, இந்துக்களுக்கு உரிய கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கங்கள் முதலியவற்றை நடத்தலாம். இந்து வேத, இந்து மதப் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்தலாம். உள்ளூரிலும், சுற்றுவட்டாரங்களிலும் உள்ள பழைய கோயில்களுக்குப் புத்துயிர்ப்புச் செய்யலாம், புதிய கோயில்களுக்கு உயிர்ப்புச் செய்யலாம்.

இந்துக் குடும்பங்களில் உள்ள முதியோர், பெரியோர், குழந்தைகள், பெண்கள் முதலியோருக்கு எந்தப் பாதிப்புக்கள் இருந்தாலும் இந்துக் கோயில்களிலேயே மந்திரிக்கக் கூடிய பூசாறி, குரு, குருக்கல், குருமார், அருட்சினையாளர், அருளாளர், அருளாளி, அருளாடு நாயகம், மருளாளர், மருளாளி, மருளாடு நாயகம் முதலியவர்களுக்குப் பயிற்சியும், அவர்கள் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரம் முதலியவையும் பதினெண்சித்தர் மடத்திலிருந்து வழங்கப்படும்.

11) **இப்படித் தனிமனிதர்களும், குடும்பங்களும் இந்து வேதச் செல்வங்களையும், இந்து மதச் செல்வங்களையும் துய்த்து; அக வாழ்வுக்கும், புற வாழ்வுக்கும் தேவையான பாதுகாப்புக்களையும், பயன்களையும் பெறுவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள நிறுவன நிர்வாகம்தான்**

**இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ. I.M.I.).** அதாவது தனிமனித வாழ்வியலையும், குடும்ப வாழ்வியலையும் இந்துக்கள் தங்களுடைய முன்னோர்கள் வகுத்தளித்துள்ள தமிழ் மொழிக்குரிய, தமிழ் இனத்துக்குரிய, தமிழ் நாட்டுக்குரிய இயற்கையான சூழ்நிலைகளுக்கேற்பப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளாக வகுத்தளித்துள்ளபடி செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்குப் பதினெண்சித்தர்கள், அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கியுள்ள இந்துவேதத்திற்குரிய 396 நூல்களும், இந்துமதத்திற்குரிய முப்பத்தாறு (36) நூல்களும் அடிப்படையாக அமைந்திடல் வேண்டும் என்பதற்காகப் பாடுபடுவதே இந்து மறுமலர்ச்சி இயக்கம். இதனுடைய கொடி பதினெண்சித்தர்கள் இந்துவேதத்திற்கும், இந்துமத்திற்கும் உரியதாக வழங்கியுள்ள குருதி வண்ணச் சிவப்புப் பின்னணியில் கருப்பு வண்ண இலிங்கம், அம்பில் மூன்று திருநீற்றுப் பட்டையையும், அவற்றின் மேல் கண்வடிவக் குங்குமப் பொட்டையும் பெற்றுள்ள மெய்ஞ்ஞானக் கொடியேயாகும். இம் மெய்ஞ்ஞானக்கொடி எல்லாக் கோயில்களிலும், பொது இடங்களிலும், மத நிறுவனங்களிலும், இந்துமதப் பற்றுளர்களின் வீடுகளிலும் விரைந்து விரிந்து உயரமானக் கம்பங்களில் பறக்க விடப்பட்டு வானத்து விண்மீன்கள் போல் எங்கும் மெய்ஞ்ஞானக் கொடிகள் பறக்க விடப்படல் வேண்டும்.

12) இதேமாதிரி தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் ஏற்படக் கூடிய எல்லாவகையான சடங்குகள், விழாக்கள், திருநாள்கள், ... முதலியவைகளில் இந்து மறுமலர்ச்சி இயக்கப் பேச்சாளர்களை வரவழைத்தும், பதினெண்சித்தர் மடத்து அருளாளர்களை வரவழைத்தும் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்திடல் வேண்டும். சொற்பொழிவுகள் கார்கால மழை போலும், கோடை மழை போலும் மாறி மாறி நிகழ வேண்டும். அதாவது, சொற்பொழிவு மழை நீரால் இந்து வேத அருட்பயிரும், இந்து மத அருட்பயிரும் நன்கு முளைத்துக் கிளைத்துத்

தழைத்துச் செழித்து வளர்ந்திட வேண்டும், வளர்ந்திட வேண்டும், வளர்ந்திட வேண்டும். இதற்காகத் தமிழர்களாக உள்ள ஒவ்வொருவரையும் அவசர அவசியமாக அழைக்கிறோம், அவசர அவசியமாக அழைக்கிறோம், அவசர அவசியமாக அழைக்கிறோம்.

13) ஏனென்றால்! ஏனென்றால்!! ஏனென்றால்!!!

**“தமிழர்களின் தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும்தான் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய பாதுகாப்புப் படையினைத் தயாரிக்கும் பாடிவீடும், பாசறையும் ஆகும்.”;**

**“தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் இந்துவேத இந்துமத அருட் பயிரினங்களுக்குரிய நாற்றங்கால்கள், நாற்றுப் பண்ணைகள், விதைப் பண்ணைகள் ஆகும்.”;**

**“தமிழ்மொழிதான் கடவுள் மொழி, தெய்வ மொழி, தேவ மொழி, வேத மொழி.”;**

**“தமிழ்நாடுதான் கடவுளர்களின் பிறப்பிடம், தாயகம்.”;**

**“தமிழினம்தான் தெய்வீக ஆற்றலின் ஊற்றுக்கண்.”;**

**“தமிழிலக்கியம்தான் அருளுலகின் கனிமலர்ச் சோலை.”;**

... எனப்படும் பதினெண்சித்தர்களுடைய குருவாசகங்கள், குருபாரம்பரிய வாசகங்கள் உலகோருக்கு உணர்த்தப்படுவதற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சி தேவை, தேவை, தேவை. **எனவே, உங்களுடைய சேவை இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் தேவை, தேவை, தேவை.**

14) இதேபோல் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, இந்துமதத்தின் முழுமுதல் ஆச்சாரியார், குவலய குருபீடம், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துவேத பீடம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், அருட்கொடை வள்ளல், ஞானவேந்தர்,

பரபிறம்மம், அந்தணர் அண்ணல், ஞாஜுச்சாரியார் அவர்கள் **இந்து முன்னேற்றக் கழகம்** (**இ.மு.க. I.M.K.**) என்ற மற்ஞெரு நிறுவன நிர்வாகத்தையும் உருவாக்கி இருக்கிருர். இந்த இ.மு.க. முழுக்க முழுக்க நம் நாட்டின் சமுதாயத் துறைகள் பற்றியும், அரசியல் துறைகள் பற்றியும்; இத்துறைகளேச் சார்ந்த இயக்கங்கள், கட்சிகள், கழகங்கள், சங்கங்கள், சபைகள், மன்றங்கள், ... முதலியவைகள் பற்றியும்; இந்த நிறுவன நிர்வாகங்களின் தலேவர்கள், தொண்டர்கள் பற்றியும் ஒரு “மறு சிந்தனேயை” (Re-thinking of the Social and Political movements and their Leaders and followers) உருவாக்குவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது, தோற்றுவிக்கப்-பட்டிருக்கிறது, தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

15) இதஞல்! இதஞல்!! இதஞல்!!! நாம் நம் தாயகத்தில் இந்து வேத வழியாகவும், இந்து மத வழியாகவும் நமது சமுதாயத்தையும், அரசியலேயும் செப்பனிடுவதற்காக நாடெங்கும் உள்ள படித்தவர்களேப் பட்டிமன்றங்களிலும், கருத்தரங்குகளிலும், விவாத மேடைகளிலும், நாட்டில் நடைபெறக் கூடிய பொதுவான திருவிழாக்களிலும், திருநாள்களிலும் பங்கு பெற்று ஏற்கனவே உள்ள சமுதாய நிலேகளேயும், அரசியல் நிலேகளேயும் பற்றிய மறுசிந்தனேகளேத் (Re-thinking) தோற்றுவித்து வளர்க்கப் பாடுபடச் செய்ய வேண்டும். இம்முயற்சியில் தங்களேப் போன்ருேர் பெரும்பங்கு வகிக்க வேண்டும்.

16) **இந்து முன்னேற்றக் கழகம் என்பது இந்து வேத வழியாகவும், இந்து மத வழியாகவும் நமது சமுதாயத்தைச் சந்திக்கவும், அரசியலேச் சந்திக்கவும், மக்களேச் சிந்திக்கச் செய்யவும் தோற்றுவிக்கப்பட்ட ஒன்ருகும்.** ஏனென்ருல், இதுவரை நம் நாட்டின் சமுதாய அரசியல் நிறுவன நிர்வாகங்களும், இவற்றின் தலேவர்களும், தொண்டர்களும் எவ்விதமான முறையான ஏட்டறிவும், பட்டறிவும் இல்லாமலேயே நமது இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் உரிய நிறுவன

நிர்வாகங்களையும், இவற்றின் தலைவர்களையும், தொண்டர்களையும், இவற்றின் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், வரலாற்றுப் பேருண்மைகளையும், வாழ்வியல் மதிப்பீடுகளையும் வாய்க்கு வந்தபடி காட்டுமிராண்டித்தனமாகத் திட்டியும், கேலி பேசியும், கிண்டல் செய்தும், இழித்துப் பழித்து விமரிசனம் செய்தும் செயல்பட்டுள்ளார்கள், செயல்பட்டு வருகிறார்கள். **இப்படி இவர்கள் செயல்பட்டதற்கும், செயல்படுவதற்கும் உரிய பயனை இவர்கள் பெறும்படிச் செய்வதற்காகத்தான் இ.மு.க. தோன்றியிருக்கிறது.** இது சமுதாயத்தை சமுதாயமாகவும், அரசியலை அரசியலாகவும் நனிநாகரிக மேம்பாட்டுப் போக்கில் சந்திக்கத் தயாராகி விட்டது.

எனவே! எனவே!! எனவே!!! நம் நாட்டின் சமுதாய அரசியல் நிறுவன நிர்வாக முறைகேடுகளையும், குறைகளையும், தவறுகளையும், இழிவுகளையும், அழிவுகளையும், வெறிகளையும், அநீதிகளையும், அவலங்களையும், கேவலங்களையும், ... வேரோடும், தூரோடும் களைந்து அகற்றிடுவதற்காக தெருத் தெருவாக, ஊர் ஊராக இ.மு.க.வின் கிளை அலுவலகங்களைத் திறந்திடுங்கள், திறந்திடுங்கள், திறந்திடுங்கள். சமுதாயச் சீர்திருத்தவாதிகள், சிந்தனையாளர்கள், அரசியல் அறிஞர்கள், மேதைகள், அருளாளர்கள், பெரும்புலவர்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க அரசர்கள், ... முதலியவர்களின் பெயரால் சங்கங்கள், சபைகள், மன்றங்கள், ... முதலியவைகளைத் தோற்றுவித்துச் செயல்பட வேண்டும் என்பதே இ.மு.க.வின் செயல்திட்டம்.

மேலும் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் நாடகம், கூத்து, பாட்டு, நாட்டியம், சிற்பம், ஓவியம், விளையாட்டு, ... முதலிய துறைகளுக்காகவும்; சாதி ஒழிப்பு, மகளிர் மேம்பாடு, மெய்ஞ்ஞான, விஞ்ஞான விளக்கங்கள், ... முதலியவற்றிற்காகவும்; ஊர் தோறும், தனித்தனி நிறுவன நிர்வாகங்கள் தோற்றுவிக்கப்படல் வேண்டும், தோற்றுவிக்கப் பட்டாக வேண்டும். அவற்றிற்குரிய உறுப்பினர்கள், தலைவர்கள்,

செயலாளர்கள், பொருளாளர்கள் முதலியவர்கள் பற்றிய விவரங்கள் பதினெண்சித்தர் மடத்திற்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு பதிவு செய்யப்பட்டாக வேண்டும். **அதாவது, ஊர் தோறும் தோற்றுவிக்கப்படும் மேற்படி நிறுவன நிர்வாகங்கள் அனைத்தும் இ.மு.க.வின் கிளைகளாகவே இ.மு.க.வின் தலைமையை ஏற்றுச் செயல்பட்டாக வேண்டும்**.

17) எனவே, தங்களுடைய தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, முன்னணி, பின்னணி, சூழல், கொள்கை, குறிக்கோள், நோக்கு, போக்கு, ஊக்கு, விருப்பம், ஏந்து நிலைகள், பணி நிலைகள், சாதனைப் பட்டியல்கள், ... முதலியவை பற்றிய முறையான, நிறைவான, முழுமையான விளக்கங்கள் முடிந்தவரை விரைந்து அனுப்புக, விரைந்து அனுப்புக, விரைந்து அனுப்புக.

18) நாம் எப்பொழுது வேண்டுமானாலும் சந்திக்கலாம், சிந்திக்கலாம். **தனிமரம் தோப்பாகாது. தனிமனிதர்களுடைய நிறுவன நிர்வாகங்களும், ஊர் ஊராக, வட்டம் வட்டமாக, வட்டாரம் வட்டாரமாக இருக்கக் கூடிய அனைத்து வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களும் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் கீழ் ஒன்றுதிரள வேண்டும், ஒன்றுதிரள வேண்டும், ஒன்றுதிரள வேண்டும்**. இல்லாவிட்டால், இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய பொது துரோகிகளையும், விரோதிகளையும், எதிரிகளையும் எக்காரணம் கொண்டும் மேற்படி இந்து வேதத்தின் பெயராலும், இந்து மதத்தின் பெயராலும் செயல்படுகின்ற தனிமனிதர்களும், நிறுவன நிர்வாகங்களும் **உதிரிகளாக இருக்கும் வரை** ஒன்றும் செய்ய முடியாது, ஒன்றும் செய்ய முடியாது, ஒன்றும் செய்ய முடியாது, செய்ய முடியவே முடியாது. இது

பற்றிச் சிந்திப்போமா? சந்திப்போமா?! என்றைக்கு?! எப்போது?! எங்கே?!

நாளை நமதே! வெற்றி நமதே!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**பதினெண்சித்தர் மடம்.**

தலைமைப்பீட ஓலைநாயகம்:-

அருள்மிகு உறையூர் வெற்றிவேற் தடக்கைக் காளி சன்னிதானம்,
சித்தரடியார் த. செயக்குமார்,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 600053.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: அப்போது தலைமைப்பீடத்தில் இருந்த சித்தரடியார் திரு செயக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**குருபாரம்பரிய வாசகம்**

'உங்கள் முயற்சிகளில் உண்மையும் நன்மையும் எந்த அளவு இருக்கின்றதோ அந்த அளவிற்குத்தான் உங்களுக்கு வெற்றி கிட்டும்'.

# இந்துக் கோயில்கள் இங்கே! இந்து வேதம் எங்கே?

இப்படி ஒரு தலைப்பில் இந்தக் கலியுகத்தில் தோன்றிய பத்தாவது ஞானாச்சாரியார் அமராவதி ஆற்றங்கரைக் கருவூர் பசுபதீசுவரர் கோயிலைக் கட்டிய பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்கள் (செயல்பட்டிட்ட காலம் கலியுகம் 3001 முதல் 3251 முடிய) இந்து வேதத்திற்காகவும், இந்து வேத மதமான இந்து மதத்திற்காகவும் எழுதிட்ட "குரு பாரம்பரியம்" (உலக மத வரலாறு), "இலக்கிய பாரம்பரியம்" (உலக மொழி வரலாறு, உலக இலக்கிய வரலாறு, உலக சமுதாய வரலாறு), "அரச பாரம்பரியம்" (உலக அரசியல் வரலாறு) எனும் முப்பெரும் நூல்களிலும்; **'மெய்யான இந்து மதக் குறிப்பேடுகள்'** எனும் நூற்றுக்கும் மேற்பட்ட தனிநூல்களிலும் எண்ணற்ற வினாக்கள் எழுப்பி விடை பகர்ந்திருக்கின்றார்.

இவரைப் போலவே இந்து மதத் தந்தையாக, இந்து வேத நாயகமாக, இந்து வேதத்தின் முழுமுதல் ஆச்சாரியாராக, இந்து மதத்தின் முழுமுதல் தலைமைக் குவலய குருபீடமாக, ஞானாச்சாரியாராகச் செயல்பட்ட குருதேவர், குருமகாசன்னிதானம், தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் (இவர் செயல்பட்ட காலம் கலியுகம் 3886 முதல் 4142 வரை) 'இந்துக் கோயில்கள் இங்கே! - இந்து வேதம் எங்கே?' என்ற வினாவைத் தமது **குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம், மெய்யான இந்து மதக் குறிப்பேடு** ... என்னும் நூல்களில் எழுப்பி எழுப்பி, பல்வேறு கோணங்களில் விடைகளை விளக்கமாக வழங்கியிருக்கின்றார்.

**//'மாசி மகமும் இந்துவேதமும்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சிறு பகுதி.//**

# இந்து முன்னேற்ற கழகம் (இ.மு.க.)

## அறிவிக்கை எண்: 8889

1) "பதினெண்சித்தர்கள் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள 'இருக்கு வேதம், அசுரவேதம், யாமவேதம், அதர்வான வேதம்' எனும் நான்கு வேதங்களின் ஒலியிலும், ஒளியிலும், வழியிலும் வாழ்வியல் பாதிப்புக்கள் அனைத்தையும் அகற்றிக் கொள்ள வாரீர்! வாரீர்!! வாரீர்!!!"

2) "பதினெண்சித்தர்களின் இருக்கு, அசுர, யாம, அதர்வான வேதங்கள் வழங்கும் பிறப்பியல், வரியியல், அங்கவியல், மனையியல், பெயரியல் எனும் ஐந்தின் மூலம் வாழ்வின் புரியாமைகளையும், தெரியாமைகளையும் அகற்றி நல்வாழ்வு வாழ வாரீர்! வாரீர்!! வாரீர்!!!"

3) "பதினெண்சித்தர்களின் இருக்கு, அசுர, யாம, அதர்வான வேதங்களின் வழியில் ஊழ்வினை, சூழ்வினை, வினை, ஆள்வினை முதலியவற்றின் பாதிப்புக்களை முறையாக அகற்றி நிறை வாழ்வு வாழ வாரீர்! வாரீர்!! வாரீர்!!!"

**பதினெண்சித்தர் மடம்,**
**இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை,**
**இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரிய குருபீடம்,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**

**//உண்மை நகல்//**

**// இதன் மூலநகல்: யாருடைய கையெழுத்து என்று நகலில் குறிக்கப்படவில்லை. தலைமைப்பீடத்தில் இருந்து எழுதப்பட்ட அஞ்சலின் நகலாக இருந்தது. //**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

**"தமிழ்மொழிதான் கடவுள் மொழி, தெய்வ மொழி, தேவ மொழி, வேத மொழி".**
**"தமிழ்நாடுதான் கடவுளர்களின் பிறப்பிடம், தாயகம்".**
**"தமிழினம்தான் தெய்வீக ஆற்றலின் ஊற்றுக்கண்".**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-